


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம், மாட்டினங்களில் கோமாரி (கால் மற்றும் வாய்நோய்) நோயினை கட்டுப்படுத்திட "தீவிர கோமாரி நோய் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ், (குஆனுஊ)" கால்நடைகளுக்கு 12-வது சுற்று கால்நோய் மற்றும் வாய்நோய் தடுப்பூசி போடும் பணிகளை, மாவட்ட ஆட்சியர் சிறு கூட்டரங்கில் இன்று (01.03.2017) துவக்கி வைத்தார். மண்டல இணை இயக்குநர் மரு. பின்டன் மிசியர் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 148/2017 நாள்: 01.03.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கால்நடைகளுக்கு 12-வது சுற்று கால்நோய் மற்றும் வாய்நோய் தடுப்பூசி போடும் பணிகளை இன்று (01.03.2017) துவக்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம், மாட்டினங்களில் கோமாரி (கால் மற்றும் வாய்நோய்) நோயினை கட்டுப்படுத்திட "தீவிர கோமாரி நோய் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ், (FMDCP)" கால்நடைகளுக்கு 12-வது சுற்று கால்நோய் மற்றும் வாய்நோய் தடுப்பூசி போடும் பணிகளை, மாவட்ட ஆட்சியர் சிறு கூட்டரங்கில் இன்று (01.03.2017) துவக்கி வைத்து, தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் 12-வது சுற்று கால்நோய் மற்றும் வாய்நோய் தடுப்பூசி பணி 2017 மார்ச் 1-ம் தேதி முதல் மார்ச் 21 முடிய 21 நாட்கள் நடைபெறவுள்ளது. இச்சுற்றில் சுமார் 70,000 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், கால் மற்றும் வாய்நோய் தடுப்பூசி பணி 21 நாட்களும் காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும், பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரையிலும் நடைபெறும்.

கால்நோய் மற்றும் வாய்நோய் பெரும்பாலும் இரட்டை குளம்புகள் கொண்ட கலப்பின கால்நடைகளை தாக்கி, கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்தும் நோய் ஆகும்.

**நோய் பரவுரம் விதம் :**

இந்த நோய் பாதித்த மாடுகளிலிருந்து மற்ற மாடுகளுக்கு நேரடியாக தொற்றும் தன்மை கொண்டது. பாதிக்கப்பட்ட மாடுகளிலிருந்து தீவனம், தீவனத் தட்டுகள், தண்ணீர், வைக்கோல், கால்நடைகளின் இதர உபகரணங்கள் மற்றும் மனிதர்கள் மூலமும் பரவும். இந்த நோய் விரைவாக காற்றின் மூலம் பரவும் தன்மை கொண்டது. பாதிக்கப்பட்ட மாடுகளின் சிறுநீர், பால், உமிழ்நீர், சாணம் ஆகியவற்றால் இந்த நோய் அதிகமான கால்நடைகளுக்கு பரவுகின்றது.

**நோய் அறிகுறிகள் :**

காய்ச்சல், தீவனம் உட்கொள்ளாது மந்த நிலைமையில் இருக்கும், வாயிலிருந்து நுரை கலந்த உமிழ்நீர் நூல் போல ஒழுகிய வண்ணம் இருக்கும், வாயின் உட்பகுதி நாக்கு மற்றும் கால் குளம்புகளின் நடுப்பகுதி, மடி ஆகிய இடங்களில் கொப்புளங்கள் தோன்றி பின்பு அவை உடைந்து ரணமாகி மாறும், அசை போடும்போது மாடு சப்பை கொட்டுவது போல் சப்தம் உண்டாகும், சினை மாடுகளில் கருச்சிதைவு ஏற்படலாம், பாதிக்கப்பட்ட மாடுகளில் மலட்டுத் தன்மையும், இரத்த சோகையும் ஏற்படும், பாதிக்கப்பட்ட பசுக்களில் கன்றுகளை பால் குடிக்கவிடக்கூடாது. அவ்வாறு குடித்தால் கன்றுகள் உடனடியாக இறக்க நேரிடும்.

**இந்நோய் தாக்குதலினால்**

கறவை மாடுகளின் பால் உற்பத்தி குறைகிறது. எருதுகளின் வேலை செய்யும் திறன் குறைகிறது. கறவை மாடுகள் சினைபிடிப்பது குறைகிறது. இளம் கன்றுகளின் இறப்பு நேரிடுகிறது.

இந்நோயிலிருந்து முற்றிலுமாக கால்நடைகளை பாதுகாப்பதற்கு வருடந்தோறும் மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் 1 முதல் 21-ம் தேதி வரை 21 நாட்கள் இதுவரையிலும் பதினொரு சுற்றுகள் வாய்நோய் மற்றும் கால்நோய் தடுப்பூசி கால்நடைகளுக்கு போடப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 2016 செப்டம்பர் 1 முதல் 21 நாட்களுக்கு 11-வது சுற்றில் 69,800 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக இவ்வருடம் மார்ச் 1 முதல் 21-ம் தேதி வரை 21 நாட்கள் பன்னிரெண்டாவது சுற்றாக கால்நோய் மற்றும் வாய்நோய் தடுப்பூசி, நமது மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் கால்நடை பராமரிப்பு துறையினரால் பல்வேறு குழுக்கள் மூலம் போடப்படுகிறது.

எனவே, கால்நடை வளர்ப்போர் இத்தருணத்தை பயன்படுத்தி, எந்தவித விடுபாடுமின்றி தங்கள் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

நிகழ்ச்சியில், மண்டல இணை இயக்குநர் மரு. பின்டன் மிசியர், வல்லுநர் மரு. சி.ஜெயபால், உதவி இயக்குநர்கள் மரு. கொ.ஆறுமுகப்பெருமாள், மரு. இரா. ரிச்சர்டுராஜ், கால்நடை உதவி மருத்துவர்கள் மரு. சுப்பிரமணியன், மரு. ஆசீர்எட்வின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.